ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# அலர் தூற்றுதல்

**ரெனி.சி.பால்[1] & முனைவர் திருமதி லட்சுமி ராமசாமி[2]**
**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]ஆய்வு நெறியாளர்**
**இசை மற்றும் நுண்கலைத் துறை**
**வேல்ஸ் பல்கலைக்கழகம்**
**சென்னை.**

**46**

**ஆய்வு நோக்கம்**

தொல்காப்பிய களவுகால மெய்ப்பாடுகளுள் ஒன்றான அலர் தூற்றுதலை ஆதாரமாகக் கொண்டு அகநானூற்றுப் பாடல்களில் உணரப்படும் மெய்ப்பாட்டினையும் பரதநாட்டிய பதத்தில் வெளிப்படும் சாத்விக அபிநயத்தையும் ஆராய்வதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

தலைவன் தலைவி ஆகிய இவ்விருவரின் காதலானது ஊர் மக்களிடத்தில் பரவி அலராக பேசப்படும் நிலையான அலர் தூற்றுதலை அகநானூற்றுப்பாடலில் எவ்வாறு பார்க்கப்பட்டுள்ளது என்பதையும் இன்றைய காலக்கட்டத்தில் கையாளப்படும் பதம் என்னும் பரநாட்டிய உருப்படியில் எவ்வாறு பார்க்கப்பட்டுள்ளது என்பதையும் இவ்வாய்வு கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**தலைப்பு அறிமுகம்**

சங்க காலத்தில் , தலைவனுக்கும் தலைவிக்கும் களவொழுக்கம் நிகழும் பொழுது மக்களால் அலர் தூற்றப்பட்டது. அதைப் போல தற்காலத்திலும் தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்படும் காதல் வெளியில் தெரிந்து மக்களால் புறம் பேசப்படுகின்றது. அகநானூற்றுப் பாடல் மற்றும் தற்காலத்தில் ஆடப்படும் பதம் ஆகியவற்றில் அலர் அல்லது புறம் பேசும் இயல்பை ஒப்பிடும் வகையில் அலர் தூற்றுதல் என்ற தலைப்புத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**அலர் தூற்றுதல் விளக்கம்**

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் உணர்வாகத் தோன்றி பின் உறவாக மலர்கின்றது. இருவருக்கும் இவ்வுணர்வு தோன்றியவுடன் ஏற்படும் உறவு களவு எனப்படும். பின்னர் ஊராருக்கு இவர்களின் காதல் தெரியவரும். ஊரார் இவர்களது உறவை இரகசியமாக பிறர் அறியும்படி பேசுவர். இது அம்பல் எனப்படும். பின்னர் பிறர் அறியும்படி பலர் வெளிப்படையாகப் பேசுவர் இச்செயல் அலர்தூற்றுதல் எனப்படும். சங்க காலத்தில் களவு ஒழுக்கம் கற்பு ஒழுக்கமாக மாறுவதற்கு அலர்தூற்றுதல் முக்கிய பங்கை வகிக்கின்றது. அவ்வகையில் தலைவனும் தலைவியும் அலர்தூற்றுதலுக்கு உள்ளாகும் பொழுது கற்பு வாழ்க்கைக்குச் செல்வதற்கான வழிக் கிடைத்தது என மகிழ்ந்த தருணங்களும் சங்க காலத்தில் இருந்துள்ளது.

KAMARAJ COLLEGE
Accredited with A+ Grade by NAAC
இந்து சமுதாய நலச்சங்கங்களால் 1966-ல் தொடங்கப்பட்ட கல்லூரி
(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)
THOOTHUKUDI - 628003

**திரவுச் சொற்கள்**

**அலர் தூற்றுதல், ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல், உள்ளி விழவு, நாரைக் கூட்ட ஒலி**

உப தலைப்புகள்

- மெய்ப்பாடுகள் விளக்கம்
- உள்ளி விழவு போல் அலராகிறது
- உள்ளி விழவு
- சஞ்சாரி பாவம்
- மெய்ப்பாடுகள்
- நாரைக்கூட்ட ஒலி போல அலர் எழுந்தது
- சஞ்சாரி பாவம்
- மெய்ப்பாடுகள்
- சாத்விக அபிநயம்
- விபாவம்
- ஆலம்பன
- உத்தீபன
- அனுபாவம்
- சாத்விகா
- காயிக்
- யாருக்காகிலும் பயமா
- அனுபாவம்

முன்னுரை

பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல், சுவைத்தல் ஆகிய ஐம்புலன்கள் மனிதனுக்கு ஆதாரமாக இருக்கின்றன. இந்த ஐம்புலன்களின் மூலமாக, தான் உணர்ந்ததை மனிதன், ஓசையாலும், சைகையாலும் உணர்வுகளை வெளிப்படுத்தத் தொடங்கினான். ஓசை சொல்லாகவும், இசையாகவும் வெளிப்பட்டது. சைகை நாட்டியமாகவும் நாடகமாகவும் வெளிப்பட்டது.

உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாக விளங்கக்கூடிய தமிழ் மொழியில் சங்க காலத்தில் இலக்கியம் செழுமைபட்டிருந்ததையும் பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவற்றில் சிறப்புற்றிருந்ததையும் பதினெண் மேல்கணக்கு நூல்கள் வழி அறியமுடிகின்றது. சங்க காலத்தில் தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றிற்கு தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார். எழுத்து, சொல் மட்டுமின்றி பொருளுக்கும் இலக்கணம் வகுத்ததில், தமிழ் இலக்கியத்தின் செழுமையினை அறிந்துகொள்ள முடிகின்றது.

இந்த பொருளதிகாரத்தில் உணர்வுகளின் வெளிப்பாடுகளைத் தொல்காப்பியர் மெய்ப்பாடுகள்

என்று கூறுகின்றார். பிற்பாடு தோன்றிய நாட்டிய சாஸ்த்திரத்தில் உணர்வுகளின் வெளிப்பாடுகளைச் சாத்விக அபிநயம் என்று பரதர் குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியத்தில் களவு கால மெய்ப்பாடுகளின் நான்காம் பகுதியில் அமைந்துள்ள "ஈரம் இல் கூற்றம் ஏற்று அலர் நாணல்" என்னும் இக்களவுகால மெய்ப்பாட்டினைக் கொண்டு, அகநானூற்றில் அமைந்த “தொடுதோற் கானவன்”…(அகம் 368) என்ற பாடலும் “ஆரையுற்று அமைந்த ஆரம் நீவி”….(அகம் 100) என்ற பாடலிலும் அமைந்த மெய்ப்பாட்டோடும் மற்றும் இன்று பரதநாட்டியத்தில் கையாளப்படும் சுப்புராம ஐயர் இயற்றிய பதங்களில் ஒன்றான “யாருக்காகிலும் பயமா…” என்ற பாடலை சாத்விக அபிநயத்தோடும் ஒப்பிட்டு அலர்தூற்றுதலை ஆதாரமாக வைத்து இக்கட்டுரையானது அமைந்துள்ளது.

**மெய்ப்பாடுகள் விளக்கம்**

“மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று” (பொருள்.மெய்ப்பாட்டியல்.3, இளம்.,) என்பது இளம்பூரணர் கூற்றாகும். மெய்ப்பாடு என்பதற்கு மெய்யால் (உடல் உறுப்புகளால்) வெளிப்படுத்தும் அபிநயம் என்று பொருள் கொள்ளலாம். “உலகத்தாரது உள்ள நிகழ்ச்சி, அவரது உடம்பின்கண் தோன்றும் கண்ணீரரும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல், வியர்த்தல், நடுக்கம் முதலிய புறக்குறிகளால் காண்போர்க்கும் புலனாகும் தன்மை மெய்ப்பாடு” என்பார் க.வெள்ளைவாரணர். “உள்ளக்கிடக்கையை மெய்யிற்படுத்தல் மெய்ப்பாடு” என்பார் ச.வே சுப்பிரமணியன்.

“மெய்ப்பாட்டுக்கும் இலக்கிய கோட்பாடுகளுக்கும் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உண்டு. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாட்டுக் கோட்பாடு வடமொழியில் பரதமுனிவர் கூறும் இரசக் கோட்பாட்டுக்கு நிகரானது. அக்கோட்பாட்டுகளுடன் இணைத்துப் பார்ப்பதற்கான பொதுமைக் கூறுகள் பல இருப்பினும் மெய்ப்பாடு வேறுபட்ட தன்மையுடையது” என்பார் ச,வே. சுப்பிரமணியன்.

எட்டு மெய்ப்பாடுகள், எட்டு இரசங்கள் இவற்றின் அடிப்படைகளைப் பின்வருமாறு பகுக்கலாம்

| மெய்ப்பாடுகள் | இரசங்கள் |
|---|---|
| உவகை | சிருங்காரம் |
| அழுகை | கருணை |
| பெருமிதம் | வீரம் |
| வெகுளி | ரௌத்திரம் |
| நகை | ஹாஸ்யம் |
| அச்சம் | பயானகம் |
| இளிவரல் | பீபத்ஸ்யம் |
| மருட்கை | அற்புதம் |

சாந்தம் நடுநிலை

**என்பனவாகும்.**

உள்ளி விழவு போல் அலராகின்றது

திணை: **குறிஞ்சி**

பாடியவர் : **மதுரை மருதன் இளநாகனார்**

தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்

உள்ளி விழவின் அன்ன

அலர் ஆகின்று, அது பலர் வாய்ப் பட்டே? (அகநானூற்றுப் பாடல் 368)

துறை: பகற்பொழுதில் சிறைப் புறமாக இருக்கும் தலைவனுக்கு கேட்கும்படி தோழி தலைவியிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

**உள்ளி விழவு**

சலங்கை ஆட்டம்- பாரம்பரிய இசைக்கருவிகளின் இசைக்கேற்ப பெரிய பரல்கள் கொண்ட, சுமார் எட்டு கிலோ எடையுள்ள சலங்கைகளைக் கணுக்கால் முதல் முட்டி வரை அணிந்து ஆடும் ஆட்டம். கொங்கு பகுதியின் தனிச்சிறப்பான கலையாக விளங்குகின்றது.

இக்கலையானது சங்க இலக்கியத்தில் உள்ளி விழவு என வழங்கப்பட்டுள்ளது. இதனை கொங்கர் மணி அரை யாத்து மறுகில் ஆடும் உள்ளி விழவு. (அகநானூறு) பாடல் 368 பாடலில் குறிப்பிட்டுள்ளது.

தலைவன் தலைவி ஆகிய இருவரும் காதல் வயப்பட்டிருந்த நிகழ்வானது ஊர் மக்கள் அனைவராலும் பேசப்பட்டு அலரானதை மேற்குறிப்பிட்டுள்ள சலங்கை ஆட்டம் என்னும் உள்ளி விழவின் ஆரவாரம் போல் அலரானது என்று உள்ளி விழவு என்னும் கலையை மேற்கோள் காட்டி அலர் பரவியது குறிப்பிட்டுள்ளது.

இன்றும் இச்சலங்கை ஆட்டம் கலைஞர்களால் கையாளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (https://youtu.be/7TEKoN5lB4Q)

இவ்வகநானூற்று பாடலில் மலையும் மலை சார்ந்த இடமும் முதற்பொருளான குறிஞ்சித்தினையாகும். கருப்பொருள்களாக இப்பாடலில் உணவு: திணை. . மரம்: அகில், வேங்கை மரம்.விலங்கு: பறவை: கிளி. மலர்கள்: குறிஞ்சிப்பூ, வேங்கைப்பூ. நீர்: அருவி, சுனை காணப்படுகின்றது.

தொழில்: மலைநெல் விதைத்தல், கிளி ஓட்டுதல். ஊர்; சிற்றூர். குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருட்களான அருவி, சுனைநீர், வேங்கைமரம், சிற்றூர் போன்றவை இடம் பெற்றுள்ளதை காணமுடிகிறது

இவ்வகநானூற்றுப் பாடலின் உரிப்பொருளாக

குறிஞ்சித்திணையில் தலைவனும் தலைவியும் இன்பம்துய்த்தலாகிய புணர்தலும் புணர்தல்

நிமித்தமும் உரிப்பொருளாகும். இதுவே இக்குறிஞ்சிப் பாடலின் பாடுபொருளாகும். இதனை மையமாகக் கொண்டு தான் மெய்ப்பாடுகள் தோன்றுகின்றது.

**சஞ்சாரி பாவம்**

மேற்குறிப்பிட்டுள்ள வரிகளை நடன அமைப்பில் நோக்கும் போது நடமணியின் கற்பனைக்கேற்ப பல சஞ்சாரி பாவங்கள் செய்ய வழிகோலாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக சில சஞ்சாரி பாவங்கள் தரப்பட்டுள்ளது.

குரங்குகளும் ஏறமுடியாத அடர்ந்த வனப்பகுதி. அங்கு குரங்குகள் மரத்தின் சிறிது தூரம் ஏறுவது போன்று வேடிக்கையாக மரத்தின் உச்சியை அதனால் எட்டமுடியவிலை என்பதை அபிநயம் செய்து காண்பித்தல். குரங்குகள் கூட ஏறமுடியாத அடந்த காட்டில் தலைவனும் தலைவியும் காதல் புரிவதாக காட்சி அமைத்து அக்காட்சியில் இருவரும் நீராடுவது போன்ற அபிநயம் செய்து இருவரும் ஒருவருக்கொருவர் தண்ணீரில் விளையாடுவது போன்ற அபிநயமும், தலைவன் தலைவி இருவரும் தோளில் கைப்போட்டு தங்கள் காதல் மிகுதியை கண்ணே மணியே என கொஞ்சுவது போன்றும் இருவரும் தழுவிக்கொள்ளுதல் போன்றும் பாவனை செய்தல்.

அதன் பின்பு நீண்ட நாள் இருவரும் சந்திக்காத நாட்களில் தலைவன் வரவை வேண்டி தலைவி எதிர்பார்த்து இருப்பது போன்று காட்சி அமைத்து அபிநயித்து காண்பித்தல்.

அதுசமயம் பகற்பொழுதில் தலைவன் தலைவியைச் சந்திப்பதற்காக தலைவன் நின்றுகொண்டிருந்தான். தலைவன் கேட்குமாறு தோழி தலைவியிடம், தான் கடைவீதியில் சென்றிருந்த போது அவ்விடத்தில் அவ்வூர் மக்கள் அலர் பேசுவதை பற்றி அபிநயித்து காண்பித்தல். தினை காக்க சென்ற இடத்திலும் அவ்வூர் மக்கள் நீண்ட மரங்களினிடையே தலைவனும் தலைவியும் இன்புற்று இருந்ததை பற்றி அலர் பேசுவதை காதுபட கேட்டதாகவும், தான் எங்கு சென்றாலும் தலைவன் தலைவி இருவரும் காதல் வயப்பட்டிருப்பது அலர்தூற்றலாகியிருப்பதை அபிநயித்து தலைவியிடம் காண்பித்தல்.

மெய்ப்பாடுகள்

மேற்குறிப்பிட்டுள்ள சஞ்சாரி பாவத்தை தொல்காப்பிய மெய்ப்பாடோடு ஒப்பிடுகையில் அடர்ந்த காட்டில் உள்ள உயர்ந்த மரங்களில் குரங்குகள் ஏற முயலும் போது ஏற முடியாமல் சறுக்கி கீழே விழும் காட்சியில் நகை என்னும் மெய்ப்பாட்டின் நான்கு களங்களில் ஒன்றான பேதமை என்னும் மெய்ப்பாடு புலப்படுகிறது.

தலைவன் தலைவி இன்புற்று காதல் கொண்டதை உவகை என்னும் மெய்ப்பாட்டின் களன்களில் ஒன்றான புணர்வு என்னும் மெய்ப்பாடு புலப்படுகிறது.

அகநானூற்றுப் பாடல் (100)

நாரைக்கூட்ட ஒலி போல அலர் எழுந்தது

பாடியவர்: **உலோச்சனார்**

திணை: **நெய்தல்**

**ஆரையுற்று அமைந்த ஆரம் நீவி**

**அம்பல் வாய்த்த தெய்ய -----தண் புலர்**

**வைகுறு விடியல் போகிய எருமை**

**நெய்தல் அம் புது மலர் மாந்தும்**

**கைதை அம் படப்பை எம் அழுங்கல் ஊரே!**

துறை: தோழி வரைவு கடாயது**.**

கருப்பொருள்களாக இப்பாடலில் மரம்: புன்னை பறவை:நாரை,தொழில்:மீன் பிடிப்பது போன்றவை இடம் பெற்றுள்ளது,

இவ்வகநானூற்றுப் பாடலின் உரிப் பொருளாக தலைவன் வரவு நோக்கி காத்திருக்கும் தலைவி, அவன் வரவில்லை என்பதால் இரங்குதலும், இரங்கல் நிமித்தலும்.

சஞ்சாரி பாவம்

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தின் போது இருவரும் காதல் புரிவதற்கு கடற்பகுதிக்கு வருவதாக அபிநயம் செய்தல். இதே போன்று தினமும் அவர்கள் இருவரின் சந்திப்பு நிகழ்வது போன்று அபிநயம் செய்தல். அதுசமயம் அவ்வூர் மக்கள் சிலர் அவர்கள் இருவரும் கடற்கரைக்கு வந்து செல்வதையும் சந்திப்பதையும் அவ்வூர் மக்கள் ஜாடைமாடையாக பேசுவது போன்று அபிநயம் செய்தல். இவ்வாறு அவ்வூர் மக்கள் சிலர் பேசுவதை கடற்கரை வழியே சிப்பிகளை எடுக்க வந்த தலைவியின் தோழி காதில் கேட்பது போன்று பாவம் செய்தல். இதை அடுத்து ஒரு நாள் தலைவன் தலைவியை சந்திக்க வருகையில் தோழி தலைவனிடம் வந்து தலைவியை சந்திக்க விடாமல் தடுத்து அவ்வூர் மக்கள் இவர்களைப் பற்றி அலர் பேசுவதை அபிநயித்து காண்பித்து இவ்வலரானது மலர்கள் மலர்ந்த கொத்துக்களையுடைய புன்னை மரங்களை உடைய அழகிய சோலை சூழ்ந்த புறையாற்றின் கடல்துறையில் உள்ள புதிய நாரைக் கூட்டம் ஒலித்தாற் போன்று அலர் எழுந்துள்ளது என்பதை அபிநயம் செய்து காண்பித்தல்.

மெய்ப்பாடுகள்

மேற்குறிப்பிட்டுள்ள சஞ்சாரி பாவத்தை தொல்காப்பிய மெய்ப்பாடோடு ஒப்பிடுகையில் தலைவன் தலைவியை சந்திப்பதில் ஆர்வமாய் நாள் தோறும் வந்து தலைவியை சந்தித்து இன்புற்று காதல் கொண்டுள்ளதை உவகை என்னும் மெய்ப்பாட்டின் களங்களில் ஒன்றான புணர்வு என்னும் மெய்ப்பாடு தோன்றுகிறது. இவ்வாறு இருவரும் காதல் கொண்டுள்ள செய்தியினை ஊர் மக்கள் அலர்பேசுவதை களவுகால மெய்ப்பாட்டின் நான்காம் பகுதியான ஈரமி இல் கூற்றம் ஏற்று அலர் நாணல் என்னும் மெய்ப்பாடு தோன்றுகிறது.

**சாத்விக அபிநயம்**

சாத்விக அபிநயத்தில் பாவம், விபாவம், அனுபாவம், வியபிசாரி பாவம், ஸ்தாயி பாவம்

ஆகியவற்றின் விளக்கங்கள் பின்வரும் பகுதியில் அமைந்துள்ளது.

விபாவம்: ஒரு உணர்ச்சியை எது தோற்றுவிக்கின்றதோ அல்லது எதைக் காண்பதால் ஒருவனின் மனதில் சுகம், துன்பம் போன்றன தோன்றுகின்றதோ பாவம் ஏற்பட எது காரணமோ அது விபாவம் என்பதாகும்.

**1.ஆலம்பன** : எவரின் மேல் பாவம் உற்பத்தி ஆகின்றதோ அதற்கு ஆலம்பன என்று கூறுகின்றோம். இது காமச் சுவையில் நாயகி, நாயகன் சம்பந்தமே ஆகும்.

2.உத்தீபன: பாவங்களுக்கு எழுச்சி தரக்கூடிய வஸ்துக்கள், இடங்கள், பின்னணி முதலியவையாகும். மேலதற்கு அனகுணமானவை ஆகும், (தனிமை, பிரிவு, நிலவைப் பழித்தல், தூது கூறல் முதலியன).

அனுபாவம்

விபாவத்தில் காணும் இன்ப துன்பங்களுக்கொப்ப அவன் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்தும் அனுபாவங்கள் ஆகும். காரணமாகத் தோன்றிய விபாவத்தை மனதால் அனுபவித்து அனுபாவம் ஆகும். அனுபாவம் என்பது அங்க அபிநயம் உணர்ந்து கொள்ளத்தக்கபடி செய்வதாகும். இந்த அனுபாவம் கை, கால், கண், புருவம், உதடுகள் போன்றவற்றுடன் கூடியதாகும். நடிகர்கள் முயன்று செய்யக்கூடியவை. இவை உடம்பைச் சார்ந்தவை ,ஆகையால் மெய்ப்பாடுகள் ஆகும். சரீர அங்க அசைவுகள் மூலம் ஒரு பாவத்தை வெளிப்படுத்துவது அனுபாவம் ஆகும். அனுபாவம் இரண்டு வகைப்படும்.

**1.சாத்விகா**

இயற்கையாகவே சரீரத்தில் மாறுதலோ காரியமோ ஏற்படும்போது அவைகளில் எந்தவிதமானக் கட்டுப்பாடும் இருக்காது. அவைகள் சாத்விக பாவங்கள் எனப்படும்.

**2.காயிக்**

அங்க அசைவுகளுக்குப் பின்னால் முயற்சி ஒளிந்து கொண்டுள்ளதே அது காயிக் எனப்படும். விபாவம் பாவங்களை முளைவிடச் செய்கிறது. அனுபாவம் அவைகளை ரசிக்கத்தக்கதாய்ச் செய்கிறது.(பத்மா சுப்பிரமணியம், பரதக்கலை கோட்பாடு, ப. எண்142, 143)

பதம்: யாருக்காகிலும் பயமா

ராகம் : பேகடா தாளம் : அடதாளம் இயற்றியவர்: சுப்புராம ஐயர்.

பல்லவி

யாருக்காகிலும் பயமா சும்ம சொல்லட்டும்
இதில் என்ன ரகசியமா

அனுப்பல்லவி

போருக்கு விஜையனன் மோடிலிங்கதுரை
போகங்கிடைத்ததெந்தன் யோகமல்லவோ பெண்ணே

சரணம்-1

**நானே சம்மதித்தால் மற்றவர்க்கென்னநஷ்டி**

**ராஜாங்கமறிந்தவற் கார்சொல்லுவாரட்டி**

**மானே மதயானைமீ தேறியுந்திட்டி**

**வாசனுழைய வேணுமோ பளாபெட்டி**

சரணம்- 2

**மனதுக்கிசைந்த மணவாளனைச் சேர்ந்த தாலென்**

**வாய் மதங்கொண்டு பேசும் வன்பர்களுரைக்குஞ்சொன்**

**தனதாயெடுத்துக்கொள்வோர் சர்வசண்டாளமாம்புன்**

**சார்புடையோரெனக்கென சாமிவந்தாற் கோடிபொன்**

சரணம்- 3

**நான் பிடித்ததுவென்ன முருங்கையிங்கொம்புபிடியா**

**நடத்தை தெரிந்தவருக் கொருவர் சொன்னபடியா**

**மான்போல்விழியாற்கெல்லா மிதுதானென்ன நோயா**

**வஞ்சியாளிதற்கெல்லா மிஞ்சின குடியா.**

யாருக்காகிலும் பயமா எனத் தொடங்கும் இப்பதம் சுப்புராம ஐயரால் இயற்றப்பெற்றது. பரதநாட்டிய உருப்படிகளில் இன்றும் இப்பதம் கையாளப்படுகின்றது.

தலைவி தன் தோழியிடம், தான் காதல் வயப்பட்டுள்ள செய்தியினை மக்கள் பேசுவதால் தனக்கு பயமில்லை என்பதை விளக்குவதாய் அமைந்துள்ளது. தலைவி எங்கு சென்றாலும் அவளைச் சுற்றி இதே பேச்சு எழுவதை கேள்வியுறுகிறாள்,

இவ்வாறு காட்சி அமைந்துள்ள இப்பாடலின் பல்லவியில் தலைவிக்கு பதட்டமான ஒரு சூழல் அமைவதற்கு காரணமாக இருப்பவர்கள் அவ்வூர் மக்கள்.

இக்காட்சியில் இடம்பெருபவர்கள் ஊர் மக்கள், தலைவி, தோழி ஆகியோர் ஆவர். இதுவே ஆலம்பன விபாவம் ஆகும்.

இக்காட்சியின் சூழல்களாக, தலைவி கோலம் போடக்கூடிய வீட்டின் முற்றம், தலைவி வழிப்பட செல்லும் கோவில், கடைவீதி போன்ற இடங்கள் இங்கே உத்தீபன விபாவமாக பார்க்கப்பட்டுள்ளது.

தலைவி தன் தோழியிடம், தான் காதல் வயப்பட்டுள்ள செய்தியினை மக்கள் பேசுவதால் தனக்கு பயமில்லை என்பதை ஆவேக (உணர்வின் கிளர்ச்சி, கொந்தளிப்பு) மற்றும் கர்வம் (அகந்தை) என்னும் வியபிசாரி பாவம் காணப்படுகின்றது. இப்பகுதியில் வீர ரஸம் வெளிப்படுகின்றது.

போர்க்காட்சியில் போர் வீரர்கள், படைகள், தலைவன், தோழி, தலைவி ஆகியோர் ஆலம்பன விபாவமாக அமைகின்றது.

ஹர்ஷ (மகிழ்ச்சி) என்னும் சஞ்சாரி பாவம் துணை நின்று வீரம் ரஸம் புலப்படுகிறது.

இப்பாடலின் சரணத்தில் தலைவி தலைவனைச் சந்திப்பதற்கு மறைமுகமாக எதற்காக

செல்லவண்டும் என்றும் தான் தலைவனை காணசெல்லுவது பற்றியும் தான் காதல் புரிவதைப் பற்றியும் தனக்கே முழு சம்மதம் இருக்கும் போது எதற்காக மக்கள் இதில் தலையிடுகிறார்கள் நான் காதல் கொண்டுள்ளதால் இவர்களுக்கு என்ன நஷ்டம் என்று ஆதங்கத்தோடு தோழியிடம் கூறுகிறாள்.

இங்கு தலைவன் தலைவி அவ்வூர் மக்கள் தோழி ஆகிய கதாப்பத்திரங்கள் தோன்றும் காரணத்தினால் இது ஆலம்பன விபாவமாக பார்க்கப்பட்டுள்ளது. இச்சூழல் தோன்றுவதற்கு காரணமாக உள்ள அவ்வூர் மக்கள் வசிக்கும் இடமும், அரண்மனை, அரண்மனை வாசல் போன்ற இடங்களும் உத்தீபன விபாவமாகும்.

இதனால் கர்வம் (அகந்தை) என்னும் வியபிசாரிபாவம் தோன்றியுள்ளது. இப்பகுதியில் ரௌத்திர ரஸம் காணப்படுகின்றது.

அனுபாவம்

இப்பாடலில் தலைவியின் காதலை வெளிப்படுத்தும் சிருங்கார ரசத்திற்கு அனுபாவமாக உத்ஸாஹம்,ஆசை போன்ற அனுபாவங்கள் வெளிப்படுகின்றது. இப்பாடலில் தலைவியின் கர்வம் மற்றும் தைரியம் வீரரசத்திற்கு அனுபாவமாக பயின்றுள்ளது.

சிருங்கார ரஸத்தில் இப்பாடல் அமைந்துள்ளது. ரதி என்பது ஸ்தாயி பாவமாகும். இப்பாடலில் காணப்படும் தலைவி அபிஸாரிகா நாயகியாவாள்.

முடிவுரை

இவ்வாய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள அலர் தோன்றும் சூழலில் அமைந்த காட்சியைக் கொண்ட பாடல்களை சஞ்சாரி பாவங்கொண்டு அபிநயம் செய்யும் போது தொல்காப்பிய மெய்ப்பாடு மற்றும் நாட்டியத்தில் தோன்றும் சாத்விக பாவம் விளக்கப்பட்டுள்ளது. அகநானூற்றில் - குறிப்பிட்டுள்ள மெய்ப்பாடுகள் நடன அமைப்பில் காண்பிக்கும் ரஸங்களுடன் ஒப்பிடுகையில், பெருமிதம் - வீரம் என்னும் ரஸத்தினையும் அச்சம் - பயானகம் என்னும் ரஸத்தினையும், உவகை - சிருங்காரம் ரஸமும், நகை-ஹாஸ்யம் என்னும் ரஸத்தினையும் வெளிப்படுத்துகிறது.

இங்கு குறிப்பிட்டுள்ள பதம் என்னும் நடன உருப்படியில் உள்ள இப்பாடலின் ரஸங்களை தொல்காப்பிய மெய்ப்பாட்டினோடு ஒப்பிடுகையில் சிருங்காரம் என்னும் ரஸம்-உவகை என்னும் மெய்ப்பாடும், வீரம்-பெருமிதம் என்னும் மெய்ப்பாட்டினையும், ரௌத்ரம் - வெகுளி என்னும் மெய்ப்பாட்டினையும் குறிக்கிறது.

சங்க இலக்கிய பாடல்களில், ஊர் மக்கள் அலர் பேசுவது பற்றியும் பதம் என்னும் நடன உருப்படியில், காணப்படும் அலரைப் பற்றியும் இவ்வாய்வு கட்டுரையில் பார்க்கப்பட்டுள்ளது. சங்க காலத்திலும் சரி நாட்டிய உருபடிகளிலும் சரி தலைவன் தலைவி இருவரின் காதல் மிகுதியினால் அனைவரின் வாய் பேச்சுக்கு ஆளாகும் போது அலர் தோன்றுகின்றது. இவ்வாறு பேசப்படும் அலரானது தலைவன் தலைவி இருவரும் விரைவில் திருமண பந்தத்தில் இணைய வழி கோலாக

அமைகிறது.

துணை நூல்பட்டியல்


- https://youtu.be/7TEKoN5lB4Q
- அ.மாணிக்கனார்,அகநானூறு மீலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
- பத்மாசுப்பிரமணியம்,பரதக்கலைகோட்பாடு,வானதி பதிப்பகம், சென்னை.